# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.958/2016/பே.1**
**ஆணை நாள்: 13-12-2018**

**திரு. எஸ். சுந்தர்சிங்,**
**வழக்கறிஞர்,**
**வலிய வீட்டு விளாகம்,**
**கப்பியறை அஞ்சல்,**
**கன்னியாகுமரி மாவட்டம் -- 629 156. — முறையீட்டு மனுதாரர்.**

**முன்னாள் பேரூராட்சித் தலைவர்,**
**செயல் அலுவலர் மற்றும்,**
**பொறியாளர்,**
**கப்பியறை பேரூராட்சி –629156. — எதிர் மனுதாரர்கள்.**

**ஆணை.**

கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி, வலியவீட்டு வளாகம் பகுதியினைச் சேர்ந்த திரு. S. சுந்தர்சிங், என்பவரது 09.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 12.09.2016 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 958/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சியில் தனது 25.04.2016 நாளிட்ட மனுவின் மூலம் பெறப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மேற்படி பேரூராட்சியில் பல்வேறு திட்ட நிதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து ஊழல்/முறைகேடு என புகார் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

23.09.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், மேற்படி முறையீட்டு மனுவினை, 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (முறையீட்டு மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள், விதி.6ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும், விதி.4–ல்

கண்டுள்ளவாறு படிவம்.1 ல் பூர்த்தி செய்தும் தனது முறையீட்டு மனுவினை முறைப்படி சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, முறையீட்டு மனுதாரர் தனது 04.10.2016 நாளிட்ட மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்தில் 06.10.2016ல் சமர்ப்பித்துள்ளார்.

17.10.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

13.07.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி 10.08.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.S. சுந்தர்சிங், தனது வாக்குமூலத்தில் தான் 04.10.2016 நாளிட்ட முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளதாகவும், இதில் கப்பியறை பேரூராட்சித் தலைவர், செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளதாகவும், தனது முறையீட்டு மனுவுடன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்கள் அடங்கிய கடித நகல்கள் அனுப்பப்பட்டதாகவும், அதில் கப்பியறை பேரூராட்சி பொதுத் தகவல் அலுவலர், தனது 25.04.2016 நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சி பொது நிதியில் இருந்து ரூ.8,92,301/–க்கு ஆழ் குழாய் கிணறு அமைத்து மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பைப்லைன் மூலம் நீரேற்றம் செய்ததாக குறிப்பிட்டுள்ளதாகவும், ஆழ்குழாய் கிணற்றில் பூவன் சந்தி மேல்நிலை நீர்த் தொட்டிக்கு பைப்லைன் நீட்டிப்பு செய்தது முற்றிலும் தவறு எனவும், அப்படி ஒரு பணி நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி ஆழ்குழாய் கிணறு 1,300 அடிக்கு போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் ஆழ் குழாய் கிணறு 200 அடிக்குள்தான் இருக்கும் எனவும், அதில் தண்ணீர் ஏதும் வரவில்லையெனவும், குறைந்த அளவிற்கு ஆழ்குழாய் கிணறு அமைத்ததால் குடி நீர் இன்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் கொண்டு வரப்படவில்லை எனவும், பணி முழுமையாக செய்திருந்தால் பயன்பாட்டிற்கு வந்திருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி பணியினை பேரூராட்சித் தலைவரின் பினாமியாக செயல்படும் திரு.ஸ்டாலின் என்பவரால் செய்யப்பட்டதால் பணி முழுமையாக செய்யப்படவில்லையெனவும், மேற்படி ஆழ்குழாய் கிணறு பணிக்கு மின் இணைப்புக் கூட பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு மனுச் செய்ததில், அதில் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையிடச் சொன்னதின் அடிப்படையில் தனது முறையீட்டினை சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி பணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் மின் இணைப்புக் கட்டணம் செலுத்தப்படாமல் ஒப்பந்தக்காரரே கட்டியுள்ளதாகவும், இதே போன்று புலிமுகத்தான் குறிச்சி நடைபாலம் அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர்த் தொட்டிக்கு நீர் ஏற்றும் சிலவினமாக ரூ.7,12,840/– செலவு செய்ததாக தெரிவித்துள்ளதாகவும், இப்பணியும் நடைபெறவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள செயல் அலுவருக்கு முன்னால் இருந்த செயல் அலுவலர் இரண்டு சின்டெக்ஸ் தொட்டி வைத்துள்ளதாகவும், இதற்கும் தற்போதுள்ள செயல் அலுவலர் மற்றும் பொறியாளருக்கு சம்பந்தம் இல்லை எனவும், மேலும் தன்னால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ள பணிகளின் பட்டியல்களில் உள்ள பல பணிகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், சில படித்துறைகளை பூசிவிட்டு புரியதாக பணி செய்ததாக குறிப்பிட்டுள்ளதாகவும், பேரூராட்சி முன்னாள் தலைவர் தனது உறவினருக்கு தனது வீட்டிற்கருகில் கஞ்சிக் கூத்து புதுகாடுவெட்டி சாலை ஓரம் மதில் சுவர் அமைத்துக் கொடுத்துள்ளதாகவும், இதன் மூலம் பேரூராட்சிக்கு ரூ.3.00 லட்சம் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது தண்ணீர் குழாய்களில் கசிவு அடைப்பதற்காக மாதந்தோறும் ரூ.2,000/– மட்டுமே செலவினம் மேற்கொள்வதாகவும், முந்தைய காலங்களில் குறைந்தபட்சம் ரூ.1.00 லட்சம் வரை செலவு மேற்கொண்டதாகவும், ஒப்பந்த பணிகள் யாவும் விதிகளின்படி செய்யாமல் ஒரு கட்ட பஞ்சாயத்து போல் பேரூராட்சித் தலைவருக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 அக்டோபர் முதல் 2016 அக்டோபர் வரை பல குடிநீர் இணைப்புகளுக்கு திரு.சி.ஸ்டாலின் என்பவர் நினைத்த அளவிற்கு தொகை வசூலித்துள்ளதாகவும், பெருவள்ளிக்குளத்தின் அருகில் ஒரு தனி நபருக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் கால்வயில் சாலை அமைத்ததால் பொதுமக்கள் பயன்படுத்தப்படவேண்டிய குடிநீர் ஆதாரமே முடக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களுக்கு எந்த விதத்திலும் பயன்படாத சாலை, அருளாநந்தா கிரானைட் நிறுவனத்திற்காக புதுக்காடுவெட்டியிலிருந்து கருங்கல் செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், குளங்களிலும், கால்வாய்களிலும் கட்டுமானம் செய்து அதன் மூலம் நீர் வழி தடைபட்டுள்ளதாகவும், மேற்படி பேரூராட்சி முன்னாள் தலைவர் தனது பதவிக்காலம் முடிவதற்கு இரண்டு மாதங்கள் முன்பு பொது நிதியில் இருந்து அதிக அளவில் சாலைகள் அமைக்க கையூட்டு பணமாக பெற்றுக் கொண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தக்காரராக செயல்பட்ட திரு.ஸ்டாலின் என்பவர் பெயரில் தொகைகள் செலவிட்டமைக்கு ஆதாரமாக 31.08.2012 கூட்ட தீர்மான நகல் உள்ளதாகவும், மேற்படி திரு. ஸ்டாலின் குறித்து பேரூராட்சி மூலம் தனக்கு அளிக்கப்பட்ட பதிலில் திரு.சி.ஸ்டாலின் பெயர் பேரூராட்சியில் பதிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். முன்னாள் பேரூராட்சி தலைவர் 2011 தேர்தலில் போட்டியிடும்போது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கருங்கல் கிளையில் அவர் கணக்கில் ரூ.189/– மட்டுமே இருந்ததாகவும், தற்போது மகள் ஆர்.எம். பிரயங்கா பெயரில் ரூ.13.00 லட்சம் மதிப்புள்ள கார் வைத்துள்ளதாகவும், மகளின் திருமண செலவு ரூ.2.00 கோடி செய்துள்ளதாகவும், மகனின் பெயரில் இன்னோவா கார் அவருடைய பதவிக் காலத்தில் வாங்கியுள்ளதாகவும், கப்பியறையினைச் சேர்ந்த ஓலைவிளையில் புதிதாக இடம் வாங்கி அதில் கட்டிடம் கட்டி ஆர்.எம்.டென்னிஸ் நிதி நிறுவனத்தில் பல கோடிகள் முதலீடு செய்துள்ளதாகவும், எனவே திரு.டென்னிஸ், பேரூராட்சி முன்னாள் தலைவர் மீதும், அப்போதிருந்த பேரூராட்சி செயல் அலுவலர், பொறியாளர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும், ஒரே வேலையினை ஒவ்வொரு கால கட்டத்திலும் வேறு வேறு நபர்கள் வைத்து வேலை முடிந்ததாக சொல்லப்பட்டு முறைகேடுகள் நடந்ததாகவும் இது குறித்து தான் தனியாக விசாரித்து தகவல் அளிப்பதாகவும், கூடுதல் ஆவணங்களை சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 13.07.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி, 10.08.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்கு மூலத்தில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான பணிகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு தங்களது முழுமையான அறிக்கையினை 10 தினங்களுக்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளதுடன், முறையீட்டு மனுதாரரின் 10.08.2017 நாளிட்ட வாக்குமூல நகலினையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

04.10.2017 நாளிட்ட கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி முறையீட்டு மனுதொடர்பாக தனது விளக்க அறிக்கையில், கப்பியறை

பேரூராட்சிக்குட்பட்ட பெருவள்ளிக்குளத்திலிருந்து சிந்தன்விளை செல்லும் சாலையில் பாலத்தடியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து பூவன்சந்தி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பைப்லைன் நீட்டித்து நீரேற்றம் செய்த வேலையானது ரூ.9,96,000/– லட்சத்திற்கு பொறியாளரின் மதிப்பீடு பெறப்பட்டு, மன்ற அனுமதி பெற்று விதிமுறைகளுக்குட்பட்டு உரிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பணிக்கான மொத்தத் தொகை ரூ.9,91,545/–க்கு பொறியியல் பிரிவினரால் பட்டியல் தயாரிக்கப்பட்டு, 05.11.2014ல் செயற்பொறியாளரால் மேலொப்பம் பெறப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு 13.01.2015ல் தொகை வழங்கப்பட்டதாகவும், மேற்படி பணி தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாத்திரமங்கலம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து, காட்டுக்குளம் பாறக்கடை மற்றும் தேவிகோடு பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்தல் வேலைக்ககாக ரூ.4.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி மதிப்பீடு பேரூராட்சி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டபின்னர், விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எஸ்.பிரான்சிஸ், என்ற ஒப்பந்தக்காரருக்கு பணி வழங்கப்பட்டு மேற்படி பணி 23.10.2013ல் முடிக்கப்பட்டு, முடிக்கப்பட்ட பணிக்கான பட்டியல் தொகை ரூ.4.00 லட்சத்திற்கு 04.11.2013ல் மேலொப்பம் செய்யப்பட்டு 02.12.2013ல் தொகை வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்லங்கோணம் குடிநீர் திட்டத்திலிருந்து விளக்கந்தோட்டம், செல்லங்கோணம் மற்றும் புதுக்காடுவேட்டி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பிவிசி குழாய் அமைத்தல் பணிக்காக ரூ.4.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதலுடன் உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்கள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எஸ்.பாஸ்பைலோன் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு மேற்படி பணி 01.11.2013ல் முடிக்கப்பட்டு பணிக்கான பட்டியல் தொகை ரூ.3,95,723/– செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டு, 06.01.2014ல் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பணியானது மதிப்பீட்டின்படி மேற்கொள்ளப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லன்விளை ஆழ்குழாய் இணைப்பில் இருந்து பூவன்சந்தி மேல்நிலைநீர்த் தேக்கத் தொட்டிக்கு பம்பிங் பைப்லைன் நீட்டித்தல் வேலைக்காக ரூ.1.55 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, உரிய விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எஸ்.பாஸ்பைலோன் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, மேற்படி பணி 27.10.2014ல் முடிக்கப்பட்டு பணிக்கான பட்டியல் உரிய பொறியியல் அலுவலரின் மேலொப்பத்துடன் 28.10.2014ல் வழங்கப்பட்டதாகவும், மேற்படி திட்டம் தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிமுகத்தான்குறிச்சி நடைபாலம் அருகில் ஆழ்குழய் கிணறு அமைத்து பனவிளை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பைப்லைன் நீட்டித்து நீரேற்றம் செய்தல் வேலைக்கு ரூ.8.20 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உரிய விதிமுறைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி.எம்.ஜெமலியா என்பவருக்கு 30.08.2013ல் பணி ஆணை வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டு, பணிக்கான அளவுகள் பொறியியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு, பணிக்கானத் தொகை 26.02.2014ல் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டதாகவும், தற்போது ஆழ்குழாய் கிணற்றில் தண்ணீர் பற்றாக்குறையாக இருந்ததால் வேளாங்கோடு என்னும் இடத்தில் மின் குடிநீர் திட்டத்துடன் பைப் இணைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தக்குளத்தில் புதிதாக மூன்று படித்துறைகள் அமைக்கப்படவில்லை எனவும், 2013–14ம் ஆண்டில் பூந்தகுளத்தில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் ஒரு படித்துறை மட்டும் அமைக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை 24.10.2013ல் வழங்கப்பட்டதாகவும் இதில் முறைகேடுகள் நடந்ததாக ஊர்ஜிதம் செய்ய இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பெருவள்ளிக்குளத்தின் அருகில் பேரூராட்சி மூலம் எந்த சாலைகளும் அமைக்கப்படவில்லையெனவும், மேற்படி இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது எனவும், திரு.சி.ஸ்டாலின் என்பவர், பேரூராட்சியில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்யப்படவில்லை எனவும், பிளம்பராக பதிவு செய்துள்ளதால் குடிநீர் திட்டப் பணிகள் மட்டும் செய்துள்ளதாகவும், தலைவர் தேர்தலில் போட்டியிடும்போது தெரிவிக்கப்பட்டுள்ள அவரது சேமிப்பு தொடர்பான முறையீட்டிற்கு அவர் பெயரில் உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருவள்ளிக்குளத்தின் அருகில் இருந்து பாண்டியப்பன் குளம் வரை உள்ள இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது எனவும், பேரூராட்சியால் சாலை அமைக்கப்படவில்லையெனவும், பொதுமக்களால் சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் பணிகள் ஏதும் செய்யப்படவில்லை எனவும், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் படித்துறைகள் அமைத்ததாக கூறப்பட்டுள்ளது உண்மைக்கு புறம்பானதாக உள்ளதாகவும், தற்போது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வாய்க்கால் மேற்படி துறையின் மூலமே விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 13.10.20107 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டுமனுவில் கோரியுள்ள சில தகவல்கள் குறித்தான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டதில், கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலரின் 03.11.2017 நாளிட்ட கடிதம் மூலம் விளக்க அறிக்கை பெறப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக இப்பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.எம்.எஸ்.சண்முகம் என்பவரின் 27.08.2018 நாளிட்ட வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரரின் புகார்களை மறுத்துள்ளதுடன், முறையீட்டு மனுதாரருக்கு, முன்னாள் கப்பியறை பேரூராட்சி மன்றத் தலைவருக்கும் இடையிலான காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர், கப்பியறை பேரூராட்சி முன்னாள் மற்றும் இந்நாள் செயல் அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரது வாக்குமூலம், கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலரின் கூடுதல் விளக்க அறிக்கை ஆகியன மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சியின் பொதுத் தகவல் அலுவ்லரிடமிருந்து, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளதாக தனது முறையீட்டு மனுவிலும், 10.08.2017 நாளிட்ட தனது வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி பேரூராட்சியில் குடிநீர் திட்டப் பணிகள் அனைத்தும் இப்பேரூராட்சியில் பதிவு செய்யாத

திரு.ஸ்டாலின் என்பவரால் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் தொடர்பாக குடிநீர் திட்டப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்தக்காரர்களுக்கு பணி வழங்கப்பட்டும், திரு.ஸ்டாலின் என்பவர் பேரூராட்சியில் பிளம்பராக பதிவு செய்துள்ளதால் குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் செய்வதாகவும் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடங்களில் சாலைகள் போடப்பட்டதாகவும், படித்துறைகள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள புகாருக்கும் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடங்களில் பேரூராட்சி மூலம் எந்தவிதமான பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் பணிகளின் விவரங்களைப் பெற்று யூகம்/அனுமானத்தின் பேரில் ஊழல்/முறைகேடு என்பதை நிரூபிக்க தக்கவகையிலான ஆதாரங்கள் ஏதுமின்றி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளதைக் கருதியும், முறையீட்டு மனுவில் கண்டுள்ள புகார்களுக்கு கப்பியறை பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் பரிசீலிக்கப்பட்டதின் பேரிலும், இம்முறையீட்டு மனு தொடர்பான மேல் நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு. எஸ். சுந்தர்சிங்,
வழக்கறிஞர்,
வலிய வீட்டு விளாகம்,
கப்பியறை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 156.

2.செயல் அலுவலர்,
கப்பியறை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
நாகர்கோவில்.